மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் தொடர்புடையவர்கள் மட்டும் தான் பேசலாம் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது தொடர்பாக, தொடர்புடைய உறுப்பினர்கள் மற்றொரு வினா கேட்கலாம்.

திரு. செ. நூர்முகமது : தலைவர் அவர்களே, கல்குளம், விளவங்கோடு வட்டங்களில் ஏற்கனவே ரேஷன் கார்டுகள் வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கின்ற மனுக்கள் மீது ஒரு குறிப்பிட்ட காலவரம்பு குறிப்பிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அரசு உத்தரவிடுமா என்று வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அந்தந் தொகுதிகளில் இப்போது புதிதாக 9 சதவிகிதம் அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் அட்டைகள் தேவைப்படுகின்றவர்கள் இலாக்காவிற்கு விண்ணப்பித்தால் இலாக்கா பரிசீலிக்கும். ஆனால், அதே நேரத்தில் அரசிற்கு இருக்கின்ற சங்கடம் என்னவென்றால், நாட்டிலே ஏறக்குறைய 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலி ரேஷன் கார்டுகள் இதுவரையிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கார்டு வைத்திருக்கின்றவர்கள் மறுபடியும் விண்ணப்பித்து அதனாலே ஒரு குழப்பம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக வேறு யாரும் வினா எழுப்பமுடியாது என்பது அவை மரபு என்பதை அருள்கூர்ந்து உணர வேண்டும். (குறுக்கீடு). இதில் எந்த ஒழுங்குப் பிரச்சினையும் வராது.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) பிரதமரின் சென்னை வருகையின்போது இடிக்கப்பட்ட குடிசைகள் விவரம்.

திரு. கே. அர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 14 ஆம் தேதி நடந்த ஒரு விவாதத்தின் போது எங்களுடைய கட்சியினுடைய மாண்புமிகு

1989 பிப்ரவரி 17] [திரு. கே. ஆர். சுந்தரம்]

உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சென்னை வருகை தந்தபோது, குடிசைகள் இடிக்கப்பட்டது சம்பந்தமாக சில விவரங்களைச் சொன்னார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் முழுமையாகப் பதில் சொல்வதாக இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். பதிலுரை வரப் போகிறது. எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டுகிறேன்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது இந்திய தேசியக் காங்கிரசினுடைய சார்பில் சில கருத்துக்களைக் கூறுவதற்கு நீங்கள் அளித்த அனுமதிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தேர்தல் நடந்து முடிந்து, தமிழை அகத்தில் கொண்டவர்கள் வாக்களித்து, தமிழை அகத்தில் கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அமைச்சரவை அமைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியில் என்னென்ன நடக்கப் போகிறது என்பதனை முழுமையாகச் சொல்லவில்லையென்றாலும், கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். சில இடங்களிலே அவை கோடுகளாகத் தெரிகின்றன. சில இடங்களிலே அந்த அளவிற்குக் கோடுகளாகக் கூட இல்லாமல் சிறு புள்ளிகளாகத் தெரிகின்றன. சில இடங்களில் அந்தப் புள்ளிகளும் இல்லாமல் இந்த உரை அமைந்திருப்பது போலவும் தோன்றுகிறது.

இங்கே நமது ஆளுநர் உரையில், 8-வது ஷெடியூலிலே இருந்து கொண்டிருக்கின்ற 15 மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டும் என்கின்ற ஒரு குறிக்கோளை நோக்கி இந்த அரசு சென்று கொண்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சிக்குரிய செய்திதான். இந்தப் பெருநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் பேசுகின்ற மொழிகளில் தேசிய மொழி என்று சொல்கின்ற அந்தஸ்து பெற்ற மொழிகள் எல்லாம் ஆட்சி மொழியாவது என்பது மகிழ்ச்சிக்குரியதுதான். அது சாத்தியமான்றபோது நாம் பேருவகை கொள்கின்றவர்களாக இருப்போம்.